செ.வெ.எண் : 19/ மார்ச் நாள் : 11.03.2021

# இராமநாதபுரம் மாவட்டம்

## வேட்புமனு தாக்கலின் போது வேட்பாளர்கள்/அரசியல் கட்சி பிரதிநிதிகள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு கூட்டம்

## மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (11.03.2021) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், வேட்புமனு தாக்கல் செய்யும் போது வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உடனான விழிப்புணர்வு குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தல் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் சட்டமன்ற பொதுத் தேர்தல்-2021 தொடர்பான அறிவிப்பின்படி, வேட்புமனு தாக்கல் தொடங்கும் நாள் 12.03.2021 (நாளை), வேட்புமனு தாக்கல் நிறைவு நாள் 19.03.2021, வேட்புமனு பரீசீலனை நாள் 20.03.2021, வேட்புமனு திரும்பப் பெற கடைசி நாள் 22.03.2021, வாக்குப்பதிவு நாள் 06.04.2021, வாக்கு எண்ணிக்கை நாள் 02.05.2021 ஆகும். அதன்படி, 12.03.2021 முதல் 19.03.2021 வரையில் (விடுமுறை நாட்கள் நீங்கலாக) காலை 11.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை மட்டும் வேட்புமனுக்கள் பெறப்படும்.

209. பரமக்குடி (தனி) சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர்/பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/பரமக்குடி வட்டாட்சியர் ஆகியோர் வேட்புமனு பெறும் அலுவலர்கள். பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலும், பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்திலும் வேட்புமனுக்கள் பெறப்படும். 210.திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/திருவாடானை வட்டாட்சியர் ஆகியோர் வேட்புமனு பெறும் அலுவலர்கள். மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட வழங்கல் அலுவலகத்திலும், திருவாடானை வட்டாட்சியர் அலுவலகத்திலும் வேட்புமனுக்கள் பெறப்படும்.

211.இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர்/இராமநாதபுரம் சார் ஆட்சியர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/இராமநாதபுரம் வட்டாட்சியர் ஆகியோர் வேட்புமனு பெறும் அலுவலர்கள். இராமநாதபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்திலும், இராமநாதபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திலும் வேட்புமனுக்கள் பெறப்படும். 212. முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/முதுகுளத்தூர் வட்டாட்சியர் ஆகியோர் வேட்புமனு பெறும் அலுவலர்கள். முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலேயே இவ்விரு அலுவலர்களிடம் வேட்புமனுக்கள் பெறப்படும்.

25 வயது பூர்த்தி அடைந்த வாக்காளர் எவரும் தேர்தலில் போட்டியிடலாம். இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து தகுதியிழப்பு செய்யப்பட்ட நபர்கள் தேர்தலில் போட்டியிட இயலாது. ஒரு வேட்பாளர் அதிகபட்சமாக இரண்டு தொகுதிகள் மட்டுமே வேட்பு மனுத்தாக்கல் செய்ய இயலும். அதேபோல ஒரு வேட்பாளர் ஒரு தொகுதியில் அதிகபட்சமாக 4 வேட்பு மனுக்கள் மட்டுமே தாக்கல் செய்ய இயலும். வேட்புமனு பெறும் அலுவலகத்திலிருந்து 100 மீட்டர் எல்லை வரை தடைசெய்யப்பட்ட பகுதியில் ஒரு வேட்பாளருக்கு இரண்டு வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும். வேட்புமனு பெறும் அறைக்குள் வேட்பாளருடன் இரண்டு நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். கொரோனா வைரஸ் பரவல் இருப்பதால் வேட்புமனு தாக்கல் செய்பவர்கள் மற்றும் உடன் வருபவர் ஆகியோர் தவறாது முக கவசம் அணிந்து வரவேண்டும்.

வேட்புமனுவை வேட்பாளரோ அல்லது அவரை முன்மொழிபவரோ தேர்தல் நடத்தும் அலுவலரிடம் நேரடியாக தாக்கல் செய்ய வேண்டும். தபால் மூலம் அனுப்ப இயலாது. வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்யும் நாளிலிருந்து தேர்தல் செலவு கணக்குகளை பராமரிக்க வேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் வரையறுத்துள்ள விதிமுறைகளை அனைத்து வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகள் முறையே பின்பற்றி முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., அவர்கள், கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.அ.சிவகாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஆர்.பழனிகுமார், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., பரமக்குடி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/வருவாய் கோட்டாட்சியர் திரு.து.தங்கவேல், திருவாடானை சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மரகதநாதன், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.சி.மணிமாறன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் திரு.எஸ்.லயோலா இக்னேஷியஸ், திரு.செ.ஜெயசிங் உட்பட அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**